
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1004

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

35

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

*1991-ஆம் ஆண்டு, முதல்முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்த அம்மையார் ஜெயலலிதா, சிறுபான்மையினர் நடத்தும் கல்வி நிறுவனங்களில் அரசு தலையீட்டினை அனுமதிக்கும் ஒரு சட்டத்தினைக் கொண்டுவந்தார். அதற்கு எழுந்த எதிர்ப்புகள் காரணமாகப் பின்னர் அதனைக் கைவிட்டார்.*

*1992, நவம்பர் மாதம், புதுடெல்லியில் நடைபெற்ற, ‘தேசிய ஒருங்கிணைப்பு கவுன்சில்’ கூட்டத்தில், பாபர் மசூதி இடிப்பினை ஆதரிக்கும் வகையில் பேசிவந்தார். குறிப்பாக, அப்போது எழுந்த அரசியல் நெருக்கடிகளால் மத்தியப் பிரதேசம், இமாச்சலப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தானில் பா.ஜ.க. அரசுகள் கலைக்கப்பட்டதைக் கடுமையாக எதிர்த்தார்.*

*தமிழ்நாட்டின் அமைதியைக் குலைக்கும் வகையில், ஆர்.எஸ்.எஸ். - இந்து முன்னணி மாநாட்டை கோவையில் நடத்த அனுமதித்தார். அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்கு ஆதரவாக 20 லட்சம் கையெழுத்துகளை அ.தி.மு.க. தொண்டர்கள் பெற்றனர். ராமர் கோயில் தொடர்பாக எல்.கே.அத்வானி பங்கேற்ற தேசிய விழிப்புணர்வுக் கூட்டத்தை பா.ஜ.க. சென்னையில் நடத்தவும் அனுமதித்தார்.*

*இப்படி, தனது அரசியல் வளர்ச்சியின் தொடக்கக் காலத்தில் இருந்தே தன்னை மிகத் தீவிரமான இந்துத்துவவாதியாக வெளிக்காட்டிக்கொண்ட ஜெயலலிதாவின் மிக மோசமான முடிவாகத்தான் கட்டாய மதமாற்ற தடைச்சட்ட மசோதா இருந்தது.*

### கண்டனக் குரல்கள்

*2003-ஆம் ஆண்டு ஜூன் மாதம், தமிழ்நாட்டில் அம்மையார் ஜெயலலிதா அவர்களால் கொண்டுவரப்பட்ட கட்டாய மத மாற்றத்துக்கு எதிரான குரல்கள் சர்வதேச அளவில் எழுந்தன. அப்போதைய போப் இரண்டாம் ஜான் பால் கண்டனம் தெரிவித்தார். போப்பின் கருத்துக்குப் பதிலளித்த ஜெயலலிதா, ‘இரண்டாம் ஜான் பால் மதத் தலைவராக இருந்தாலும், ஒரு ஜனநாயக அரசு நிறைவேற்றிய சட்டம் குறித்து கருத்து தெரிவிப்பதற்கு அவருக்கு எந்த அதிகாரமும் இல்லை’ என்று காட்டமாக விமர்சனம் செய்தார். தமிழ்நாட்டில் அனைத்துக் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்தபோது, பா.ஜ.க. மட்டுமே அப்போது அந்தச் சட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தது.*

*இந்த மசோதா குறித்து பேசிய ஜெயலலிதா, “கட்டாய மதமாற்றத் தடைச்சட்டம் எந்த ஒரு மதத்தையோ அல்லது சிறுபான்மை இனத்தையோ மனதில் வைத்து கொண்டு வரப்படவில்லை. வற்புறுத்தியும் ஆசை காட்டியும், ஏமாற்றியும் மதமாற்றம் செய்ய முயல்பவர்கள் மட்டுமே இந்தச் சட்டத்தின் மூலம் தண்டிக்கப்படுவார்கள். கடந்த 1981-ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டம், மீனாட்சிபுரத்தில் ஏராளமான பட்டியலின மக்கள் வற்புறுத்தலின்பேரில், இஸ்லாமிய மதத்துக்கு மாறினர். 1982-ஆம் ஆண்டு, கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக்காடு பகுதியில் ஏற்பட்ட கலவரத்துக்கு மதமாற்ற முயற்சிதான் காரணம் என்று கண்டறியப்பட்டது. அதனால்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது” என்று விளக்கம் அளித்தார்.*

*2002-ஆம் ஆண்டு அக்டோபர் 31-ஆம் தேதி, சட்டமன்றத்தில் மத மாற்றத் தடைச்சட்ட மசோதா, விவாதத்திற்கு வந்தது. தி.மு. கழகமும் மற்ற எதிர்க்கட்சிகளும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தபோதிலும் அ.தி.மு.க. தனக்கு இருந்த பெரும்பான்மை காரணமாக அந்தச் சட்டத்தை நிறைவேற்றியது. தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு, சிறுபான்மையினரின் எதிர்ப்பு என அனைத்தையும் புறந்தள்ளி நிறைவேற்றப்பட்ட இந்த சட்டத்துக்கு பொதுமக்கள் மத்தியில் கடும் எதிர்ப்புகள் எழுந்தன.*

*அடுத்து வந்த நாடாளுமன்றத் தேர்தலில், தி.மு.க. கூட்டணி தமிழ்நாட்டில் 39 தொகுதிகளிலும், புதுச்சேரியில் ஒரு தொகுதியிலும் மாபெரும் வெற்றி பெற்றது. அ.தி.மு.க ஒரு இடத்தில்கூட வெற்றிபெறாமல் படுதோல்வியைச் சந்தித்தது.*

## ஆபத்துகளில் இருந்து காக்கும் கழகம்!



*அந்தப் படுதோல்வி காரணமாக, 18-5-2004 அன்று அவசரச் சட்டத்தின் வாயிலாக, மதமாற்ற தடைச்சட்டத்தை ரத்து செய்வதாக அறிவித்தார் ஜெயலலிதா. அதுமட்டுமல்லாமல், கழக ஆட்சியில் தொடங்கப்பட்டதால், அவர் நிறுத்தி வைத்திருந்த சில திட்டங்களை மீண்டும் தொடங்குவதாகவும் அப்போது அறிவிப்புகள் வந்தன.*

### 41-வது வெற்றி

*இதுதொடர்பாக கலைஞரிடம் செய்தியாளர்கள் அப்போது கேள்வி எழுப்பினர். “தி.மு.கழக ஆட்சியில் கொடுக்கப்பட்டு வந்த சலுகைகளையெல்லாம் மூன்றாண்டு கால ஆட்சியில் ஜெயலலிதா ஒழித்துக்கட்டினார். தற்போதைய தோல்விக்குப் பிறகு, ‘கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்’ என்ற பழமொழிக் கேற்ப இப்போது சூரிய நமஸ்காரத்திற்கு வந்திருக்கிறார். சூரியன் தி.மு.க.வின் தேர்தல் சின்னம் என்பது உங்களுக்குத் தெரியும். அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவதற்காக மக்களை ஏமாற்றப்பார்க்கிறார். மக்கள் ஏமாறுவார்கள் என்று நான் நம்பவில்லை. ஜெயலலிதாவின் இந்த அறிவிப்புகள் தி.மு.க. தலைமையிலே அமைந்த கூட்டணிக்கு, தமிழ்நாட்டில் கிடைத்த மகத்தான வெற்றி. 40 இடங்களைப் பெற்றதைப் போல இது 41 ஆவது வெற்றி” என்று பதிலளித்தார்.*

> “அன்று சிறுபான்மையினருக்கு ஆபத்து சூழ்ந்தபோது ஆதரவாக நின்றார் கலைஞர். இன்று முதலமைச்சராக கழகத் தலைவர் அதே ஆபத்தை எதிர்த்து நின்றுகொண்டிருக்கிறார்.”

*சட்டப் பேரவை இயங்காத நாட்களில் கொண்டுவரப்படும் அவசரச் சட்டம், அடுத்து நடைபெறும் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது விதி. ஆனால், ஜெயலலிதாவின் அரசாணை வெற்று கண்துடைப்பாக மட்டுமே இருந்தது. அடுத்து, ஜெயலலிதா ஆட்சிக்காலம் 2006-இல் முடிவடையும் வரை அப்படியொரு சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படவே இல்லை. சிறுபான்மை மக்களை ஏமாற்றுவதற்காக அறிவிப்பை மட்டும் வெளியிட்டுவிட்டு, பின்னர் அமைதியாகிவிட்டார்.*

*மீண்டும் 2006-இல் தி.மு.க. ஆட்சி அமைந்த பிறகு, கட்டாய மத மாற்றத் தடை (நீக்கச்) சட்டமுன்வடிவு தாக்கல் செய்யப்பட்டு, 31-05-2006-இல் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

*தனது ஆட்சிக்காலத்திலேயே அவசர சட்டம் நிறைவேற்றப்பட்டு, கட்டாய மதமாற்ற தடைச்சட்டம் நீக்கப்பட்டுவிட்டதாக அன்றைக்கு சட்டமன்றத்தில் கூறினார், ஜெயலலிதா. அதற்குப் பதிலளித்த கலைஞர், ‘‘உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி அவசரச் சட்டம் நிறைவேற்றினாலே போதுமானது என்று ஜெயலலிதா சொல்லுகிறார் என்றால், பிறகு ஏன் இந்தக் கோப்பிலே பேரவையிலே வைத்து ஆறு வார காலத்திற்குள் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று அவரே ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்? ஜெயலலிதா கோப்பிலே ஒப்புக்கொண்டது உண்மையா? அறிக்கையிலே கூறியிருப்பது உண்மையா? ஜெயலலிதாவிற்கு உண்மையிலே சிறுபான்மையினர்மீது அக்கறை இருக்குமானால், அவசரச் சட்டத்துக்கு மாற்றான சட்டத்தை அடுத்துக் கூடிய சட்டப் பேரவையில் ஏன் கொண்டு வந்து நிறைவேற்றவில்லை? பொதுத்துறை கோப்பிலே அடுத்து சட்டசபை கூடிய ஆறு வாரத்திற்குள் அவசரச் சட்டத்திற்கு மாற்றுச் சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றப் பட்டிருக்க வேண்டும். ஆனால், அவர் ஆட்சியில் இருந்து இறங்குகின்ற வரை அதைப் பற்றி நினைக்கவே இல்லை. ஏனென்றால், அவருக்கு சிறுபான்மையினரைப் பற்றிய நினைவே இல்லை. எப்போதும் அவருக்கு சிறுபான்மையினரின் நினைவு, தேர்தல் நேரத்தில் மட்டும்தான் வரும் என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவார்கள்” என்று பதிலளித்தார்.*

### ஆபத்துகளில் பாதுகாப்பு

*ஆம், சிறுபான்மையினருக்காக எப்போதும் உழைக்கும் இயக்கம் தி.மு.கழகம். ஆனால் ஜெயலலிதாவுக்கு தேர்தல் சமயத்தில் மட்டும்தான் சிறுபான்மையினர் நினைவுக்கு வருவார்கள். ஜெயலலிதாவுக்கு மட்டுமல்ல; அ.தி.மு.க.வை இன்று கைப்பற்றி வைத்திருக்கும் எடப்பாடி பழனிசாமிக்கும் சிறுபான்மையினர் குறித்த அக்கறையில்லை என்பதை அவரது பல நடவடிக்கைகளில் பார்க்கலாம்.*

*இந்தியா முழுவதும் பல மாநிலங்களில், ‘சிறப்பு தீவிரத் திருத்தம்’ (எஸ்.ஐ.ஆர்) என்கிற பெயரில் சிறுபான்மையினர் வாக்குகளை நீக்கிக் கொண்டிருக்கிறது, தேர்தல் ஆணையம். பா.ஜ.க.வுக்கு ஆதரவாக நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கும், இந்த ஜனநாயகப் படுகொலையை அனைத்துக் கட்சிகளும் கண்டிக்கும் நிலையில், பா.ஜ.க. கூட்டணியில் இருப்பதாலேயே அ.தி.மு.க. ஆதரிக்கிறது. அன்று சிறுபான்மையினருக்கு ஆபத்து சூழ்ந்தபோது ஆதரவாக நின்றார் கலைஞர். இன்று முதலமைச்சராக கழகத் தலைவர் அதே ஆபத்தை எதிர்த்து நின்று கொண்டிருக்கிறார்.*

...நீளும்

## காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு!

இந்திய ஜனநாயகத்தை வலிமைப்படுத்திய அரசியல் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம். கடந்த 75 ஆண்டுகளாகத் தமிழ்நாட்டின் வளர்ச்சியைக் கட்டமைத்ததுடன் தேசிய அரசியலின் திசைகளையும் தீர்மானிக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் அரசியல் பேரியக்கத்தின் வரலாற்று ஆவணமாகத் தயாராகிறது ‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’ நூல். இது குறித்து, கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தனது சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவு.




“போராட்டங்கள், தியாகங்கள், சாதனைகளைக் கொண்ட பேரியக்கமாம் நம் திராவிட முன்னேற்றக் கழகம் 75 ஆண்டுகளை நிறைவு செய்திருக்கிறது. பவளவிழாவை நிறைவுசெய்துள்ள நம் கழகம் அரசியல், சமூகம், பொருளாதாரம், பண்பாட்டுத்தளங்களில் ஏற்படுத்திய தாக்கங்கள் குறித்து ‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’ என்னும் கட்டுரைத்தொகுப்பு, இளைஞர் அணியின் முத்தமிழறிஞர் பதிப்பக வெளியீடாக வெளிவரவிருக்கிறது.

எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள், ஊடகவியலாளர்கள், பொருளாதார அறிஞர்கள், சமூகம் மற்றும் அரசியல் இயக்கங்களின் தலைவர்கள் என 80 கட்டுரையாளர்கள், தேசியக்கட்சிகளின் தலைவர்கள், கூட்டணிக்கட்சி நிர்வாகிகள், கழகத்தலைவர் உள்ளிட்ட தலைமைக்கழக நிர்வாகிகள் ஆகியோரின் கட்டுரைகளுடன் 1,120 பக்கங்கள் கொண்ட ஒரு மாபெரும் வரலாற்று ஆவணமாக இந்த நூல் உருவாகியிருக்கிறது.

கழக இளைஞர் அணியின் கருத்தியல் பணிகளில் அடுத்த பாய்ச்சல்தான் இந்தப் புத்தகம். கழகத்தலைவர் கரங்களால் வெளியிடவிருக்கும் ‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு‘ நூலின் அட்டைப்படத்தை வெளியிடுவதில் பெருமை கொள்கிறேன்’ எனக் குறிப்பிட்டுள்ளார். விரைவில் இந்த நூல் தொடர்பான இதர அறிவிப்புகள் வெளிவரவுள்ளன. இந்த வரலாற்று ஆவணம் கழகத்தினரின் அறிவுச்சொத்தாக மாறட்டும்!

## ஃப்ளாஷ்பேக்





கவிஞர் மல்லை மு.இராமநாதன்

### இலக்கிய மாநாட்டில் அரசியல்!

1985-ஆம் ஆண்டு, சேலத்தில் மூன்றாவது உலகத் தமிழ் பண்பாட்டு மாநாடு நம் இனமானப் பேராசிரியர், தலைமை வகிக்க நடைபெற்றது. பல நாடுகளில் இருந்தும் அறிஞர் பெருமக்கள் வருகை தந்து கலந்து கொண்டனர். இந்தப் படத்தில் ஒலிவாங்கி முன்னால் நிற்பவர், ஈழத்தில் இருந்து வருகை தந்த இந்திராணி, அவருக்கு அடுத்து நான், அடுத்ததாக சேலம் மேயராக இருந்த சூடாமணி, திராவிடர் கழகத்தின் மீ.மு.சின்னாண்டார், பேராசிரியர் மற்றும் மலேசியாவில் இருந்து வருகை தந்த ர.ந.வீரப்பன் ஆகியோர் உள்ளனர். இந்த மாநாடு, அரசியல் பேசிய உலகத் தமிழ் பண்பாட்டு மாநாடாக அமைந்திருந்தது.

**– கவிஞர் மல்லை மு.இராமநாதன்,**
**இலக்கிய அணித் துணைத் தலைவர்,**
**நாமக்கல் மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு — கருவூலம்

### திராவிடம் இணைந்து வாழும்!

1958-ஆம் ஆண்டு, ஏப்ரல் 26, 27 தேதிகளில் கர்நாடக மாநில தி.மு.க. 2-வது மாநில மாநாடு, பெங்களூருவில் நடைபெற்றது. பேரறிஞர் அண்ணா, நாவலர் உள்பட கழக முன்னோடிகள் பங்கேற்றனர். மாநாட்டுக்குத் தலைமைதாங்கியவர், சட்டமன்ற உறுப்பினராக இருந்த சத்தியவாணி முத்து. அவரது தலைமை உரையில் தமிழ், தெலுங்கு, கன்னடம், கேரளம் ஆகிய நான்கு மொழிகளைக் கொண்ட திராவிடம் இணைந்து வாழும் ஒருமைப்பாட்டை வலியுறுத்தினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131